பத்மா பிலிம்ஸ்
மனமுள்ள மறுதாரம்
டைரக்ஷன்
திரைக்கதை, வசனம்
W.R.சுப்பராவ் · M.S.ராம்நாத் · முரசொலி மாறன் M.A.

மனமுள்ள மறுதாரம்.

★

திரைக்கதை வசனம் :

முரசொலி மாறன் M. A.

★

டைரக்ஷன் :

W. R. சுப்பாராவ்.

M. S. ராம்ஜூத்.

★

இசை அமைப்பு :

K. V. மகாதேவன்.

★

பாடல்கள் :

A. மருதகாசி.

★

நடன அமைப்பு :

சம்பத்து, சின்னிலால்.

★

பின்னணி இசை :

ஜிக்கி. சீர்காழி. கோவிந்தராஜன்.
ஜமுனாராணி. A. M. ராஜா.
ராஜேஸ்வரி. S. C. கிருஷ்ணன்.
கஸ்தூரி, கஜலக்ஷிமி, உடுதா.

★

நடனம் :

மோகனா — மாதுரி
சாந்தா — ஈஸ்வர்லால்.

‘மனமுள்ள மறுதாரம்’

கதைச் சுருக்கம்

★

சேகர், கோமதி—திருச்சியிலே இன்பமாக வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்! அவர்களுக்கு வாசுகி என்ற பெண் குழந்தையும் இருக்கிறது!

ஒருநாள் தாய் தந்தையரோடு வாசுகியின் உருவப் படம் பதித்த லாக்கெட் ஒன்றை சேகர் வாங்கி வந்து, குழந்தையின் கழுத்தில் அணிவிக்கிறான். அதே நேரம் தனக்கு சென்னையில் வேலைமாற்றம் ஆகியிருப்பதையும் மனைவியிடம் அறிவிக்கிறான்.

அந்த நேரம் சேகரின் நண்பன் சந்திரன் அவனுக்குப் பிரிவுபசாரம் நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட விருந்திற்கு அழைக்கிறான். குழந்தை வாசுகியை வேலைக்காரியிடம் ஒப்புவித்துவிட்டு சேகரும், கோமதியும் விருந்திற்குச் செல்கின்றனர்.

விருந்து முடிந்து திரும்பி வந்த பிறகு அவர்கள் வீடு தீப் பற்றி எரிவதைக் காண்கின்றனர். வேலைக்காரி குழந்தையை மட்டும் தனியாக தூங்க வைத்துவிட்டு கூத்து பார்க்கச் சென்று விட்டதையும் உணர்கின்றனர்.

கோமதி குழந்தையை மீட்க தீயைப் பொருட்படுத்தாது உள்ளே ஓடுகிறாள். அவளைப் பின் தொடர்ந்த சேகரை மற்றவர்கள் தடுத்து விடுகின்றனர்.

கோமதி உள்ளே சென்று குழந்தையைமட்டும் கீழே போட, சேகர் பிடித்துக்கொள்கிறான். பிறகு தானும் குதிக்க, கோமதி அங்கே இருந்த கல்லில் அடிபட்டு உயிர் துறக்கிறாள்.

குழந்தை வாசுகியை மாமனார் பொன்னம்பலத்திடம் ஒப்படைத்துவிட்டு சேகர் சென்னை புறப்படுகிறான்.

நான்கு ஆண்டுகள் குழந்தையைப் போய்ப் பார்க்க வேண்டுமே என்ற கவலை இல்லாமல் வாழ்ந்த சேகருக்கு, வாசுகியை சென்னைக்கு அழைத்துச் சென்று படிக்கவைக்க வேண்டுமென்று மாமனாரிடமிருந்து கடிதம் வருகிறது.

உடனே குபேரம் பிள்ளை என்கிற கருமியின் வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, மாமனார், மாமியார், வாசுகி ஆகிய மூவரையும் அழைத்து வரவேண்டுமென்று ஏற்பாடு செய்கிறான்.

அதற்கிடையில் தன் மனைவி கோமதியின் குரலை ஒத்த உஷா என்ற பெண்ணை அவன் ஒருநாள் தண்ணீர் விபத்திலிருந்து காப்பாற்றுகிறான்.

அவளது சிரிப்பு சப்தம் கேட்டு வெளியே ஓடிவந்து, அவள் கல்லூரிக்குப் போவதைப் பார்ப்பதிலே இன்பம் காணுகிறான்.

உஷா ஒரு புதுமைப் பெண். ஆண் பெண் சமத்துவத்திலே நம்பிக்கை வைத்திருப்பவள்.

உஷாவின் தாயாருக்கும் சேகரைப் பிடித்திருந்தது.

சேகர் தான் முன்பே திருமணமானவன் என்பதையும், தனக்கு ஒரு குழந்தை இருப்பதையும் அவர்களிடம் சொல்லாமல் உஷாவைத் திருமணம் செய்துகொள்கிறான்.

சேகர், உஷா ஆனந்த வாழ்க்கை நடத்துகின்றனர்.

ஒருநாள் தாங்கள் மதுரை சித்ரா பௌர்ணமி உற்சவத்திற்குப் போக இருப்பதாகவும், அதனால் குழந்தை வாசுகியை அழைத்துச் செல்லுமாறும் மாமனார் பொன்னம்பலம் கடிதம் எழுதுகிறார்.

அந்தக் கடிதத்தைக் கண்ட உஷா தான் ஏமாற்றப்பட்டதை உணர்கிறாள்; எரிமலையாகிறது அவள் நெஞ்சம்!

ஒட்டு மாஞ்செடிபோல் ஆண் பெண் இணைந்து வாழ்வதுதான் குடும்ப வாழ்க்கையின் இலக்கணம். அதைத் தன் கணவர் மதிக்கவில்லை என்பதை நினைத்து, உஷா மனம் நொந்து வீட்டைவிட்டு வெளியேறுகிறாள்.

அதன் பிறகு?

பிரிந்த அந்த இளம் தம்பதிகள் ஒன்று சேருகிறார்களா?

தாயில்லாக் குழந்தை வாசுகியின் வருங்காலம் என்ன?

விடை வெள்ளித் திரையில்!

பாட்டு-1

கோமதி பாடியது: ஜிக்கி

திருவிளக்கு வீட்டுக்கு அலங்காரம்!
திருமாங்கல்யம் பெண்களுக்கு ஜீவாதாரம்! (திருவிளக்கு)
திருவிழா ஊருக்கெல்லாம் சிங்காரம்!
திருநாட்டின் பெருமைக்கு இதுவேதான் ஆதாரம் (திரு)
"இல்லறமே நல்லறமாய் வாழுங்க"—என்ற
வள்ளுவரை வாசுகியைப் பாருங்க!
தெள்ளமுதாம் நீதிமொழி தன்னையே—நமக்கு
அள்ளித்தந்த பாட்டி இந்த ஔவையே! (திரு)
சதிபதிகள் இணைந்தது சம்சாரமே—அதில்
தனிமை வந்தால் இன்பநிலை மாறுமே!—எனும்
தத்துவத்தைச் சொன்ன வேதநாயகன்—சொல்லின்
நித்தியத்தை உணரவேணும் யாருமே! (திரு)

பாட்டு-2

சேகர் பாடியது: சீர்காழி கோவிந்தராஜன்

(தொகையரு)

தூங்கையிலே வாங்குகிற மூச்சு—இது
சுழிமாறிப் போனாலும் போச்சு—உளுத்த
மூங்கில் உடல்; மேல்மினுக்குப் பூச்சு—என்ற
மொழி என்றும் உண்மையான பேச்சு!

பாட்டு

இன்பமெங்கே? இன்பமெங்கே என்றுதேடு—அது
எங்கிருந்த போதும் அதைநாடி ஓடு!
இன்றிருப்போர் நாளையிங்கே
இருப்பதென்ன உண்மை?—இதை
எண்ணிடாமல் சேர்த்துவைத்துக்
காத்துஎன்ன நன்மை?
இருக்கும்வரை இன்பங்களை
அனுபவிக்கும் தன்மை;
இல்லையென்றால் வாழ்வினிலே
உனக்குஏது இனிமை? (இன்)
கனிரசமாம் மதுவருந்திக்
களிப்பதல்ல இன்பம்!
கணிகையரின் துணையினிலே
கிடைப்பதல்ல இன்பம்!

இணையில்லா மனையாளின்
வாய்மொழியே இன்பம்! அவள்
இதழ்சிந்தும் புன்னகையே
அளவில்லாத இன்பம்!... (இன்)

மாடிமனை கோடிபணம் வாகனம் வீண்ஜம்பம்
வாழ்வினிலே ஒருவனுக்கு தருவதல்ல இன்பம்!
மழலைமொழி வாயமுதம் வழங்கும்பிள்ளைச் செல்வம்—உன்
மார்மீது உதைப்பதிலே கிடைப்பதுதான் இன்பம்!
(இன்)

பாட்டு-3

பாடியது: ஜிக்கி, ராஜேஸ்வரி, கஸ்தூரி

கோரஸ்: ஆசைக் கனவுகளே—சதாவும்
ஆடுது நெஞ்சினிலே!
அழகாக அசைந்தாடும்—மலர்
ஊஞ்சல் இதுபோலே! ... ... (ஆசைக்)

ஒரு தோழி: ஆடிடும் ஊஞ்சல் போன்றதுதானே
வாழ்க்கையிது! — நம
தாசையெல்லாம் கடல் அலை போலே
நிலை நில்லாது!

உஷா: ஹாய் ... ...
ஆமாண்டி அம்மா மணிமேகலை—புதுமேகலை
அட்சயபாத்திரம் தானடி உனது
கையில் யில்லை — (இப்போ) (ஆசைக்)
ஆடவரோடு சரிநிகராக வாழ்ந்திடவே—நம
தறிவினைக்கொண்டு உலகினை என்றும்
ஆண்டிடவே

தோழி-2 கோடானு கோடியின்பம் தேடவே—தினம்
தேடவே
குவலயமெல்லாம் நம்மைப் போற்றி
புகழ் பாடவே — (இந்த) (ஆசைக்)

தோழிகள்: தேன்மலர் வாசம் வீசிடும்
தென்றல் தேரிலே—நாம்
சிந்தை மகிழ்ந்து பறந்து திரிந்து
பாரினிலே
காணாத காட்சி யெல்லாம் காணவே—தினம்
காணவே
கவலைகள் இன்றி பறவைகள் போலே
உயிர்வாழவே ... ... (ஆசைக்)

பாட்டு-4

பாடியது: ஜிக்கி, A. M. ராஜா

சேகர்: காயிலே இனிப்பதென்ன?
கனியானல் கசப்பதென்ன?
வாயாடி வம்பு பேசும் மானே!
பதில் சொல்லு!

உஷா: காலத்தின் கோலத்தினல்
கட்டழகு குலேவதினல்
எட்டிக் கனியாக ஆண்கள்
எண்ணும் பெண்ணினந்தான்!

சேகர்: நீலமாய்த் தெரிவதென்ன?
நீர்வீழ்ச்சி யாவதென்ன?
நிமிர்ந்தே என்னைப் பார்த்து
நேரான பதில் சொல்லு!

உஷா: நெஞ்சிலே அனுதினமும்
கொஞ்சும் இன்ப துன்பமெனும்
நிலேயைக் காட்டுகின்ற
பெண்களின் கண்கள்தான்!

சேகர்: பிரிந்தால் கனலாகி
நெருங்கிநின்ருல் பனியாகி
கருத்தில் விளேயாடக்
காணும் பொருளென்ன?

உஷா: இரண்டு இதயங்களே
இவ்வுலகில் ஒன்ருக்கி
என்றும் அழியாமல்
வாழும் உண்மைக் காதல்தான்!

இருவரும்: தெய்வீகக் காதலினல்
சேர்ந்துவிட்டோம் ஆனதினல்
சிங்கார கானம்பாடி
வாழ்வோம் நாம் இனிமேல்.

பாட்டு-5

மனோரமா பாடியது: ஜமுனராணி

தூண்டியில் மீனும் விழுந்திருக்கு—சேர
வேண்டிய இடத்தில் சேர்ந்திருக்கு—இது
ஆண்டவனலே கெடைச்சிருக்கு—யோகம்
அடிச்சிருக்கு! (தூண்டியில்)
புதுரகமீனு இது ஒரு தினுசு!
கதைபல சொல்லும் கண்ணலே!
புன்னகை செய்தாலே — இந்த

உலகே மயங்கும் தன்னாலே—இது
ஆண்டவனாலே கெடைச்சிருக்கு — யோகம்
அடிச்சிருக்கு **(தூண்டியில்)**
பதுங்கிஇருந்து பாய்ச்சல் காட்டும்!
பக்குவமாக விளையாடும்!
பக்கம் சென்றாலே — இது
வெட்கத்திலே மிரண்டோடும்—இது
ஆண்டவனாலே கெடைச்சிருக்கு—யோகம்
அடிச்சிருக்கு! **(தூண்டியில்)**

பாட்டு-6

பாடியது: ஜிக்கி, சீர்காழி கோவிந்தராஜன்

தொகையறு

சேகர்: ஓடி ஆடி பாடு பட்டு ஆம்பளேங்க
ஒழுங்காகப் பணங்காசு தேடுறாங்க! அவுங்க
தேடிவச்ச பணத்துக்கு எதிரியாக
தண்டச் செலவுகளும் செய்யுறாங்க பொம்ப
ளேங்க!

பாட்டு

ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுறாங்க பாடுறாங்க
அன்யாயம் பண்ணுறாங்க—காசையும்
அள்ளி அள்ளி வீசுறாங்க!

தொகையறு

உஷா: சிக்கனமா செலவுபண்ணி, பக்குவமா
குடும்பம்பண்ணி
சேமித்து வைக்கிறாங்க பொம்பளேங்க-அதை
தேட்டை போட்டுக் கண்டபடி, செலவு பண்ணி
மைனரைப்போல் ஆம்புளேங்க
சிங்காரம் பண்ணுறாங்க

பாட்டு

ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுறாங்க பாடுறாங்க
அன்யாயம் பண்ணுறாங்க—காசையும்
அள்ளி அள்ளி வீசுறாங்க!

தொகையறு

சேகர்: அழகாகப் பெட்டியிலே வாங்கி வாங்கி
அடுக்குறாங்க ஜார்ஜெட்டு!
அதற்கான பில்லைக் கண்டா—ஐயாவும் ஆள்
அவுட்டு!

வழவழப்பா கால்களுக்கு வாங்குறுங்க சில்ப்பர்
தங்கள் மனம்போல செலவழிச்சு
கணவனை ஆக்குறுங்க பாப்பர்!
(ஆடாத)

பாட்டு-7

பாடியது: ராஜேஸ்வரி, கஸ்தூரி

காலிலே தண்டை கலகலக்க!
கண்டாங்கி சேலே சலசலக்க!
காண்பவர் மனசு ஜிலுஜிலுக்க!
கழுத்தை வெட்டுடி வீராயி!
பாளே வெடிச்சு சிரிப்பது போல்
பல்லின் வரிசை பளபளக்க
வாலைப் பருவம் ஜொலி ஜொலிக்க
வளைஞ்சு ஆடடி ராமாயி!
பம்பரக் கண்ணைப் பக்குவமா
சுழட்டடி வீராயி! — ஒரு
பார்வை பாரு புதுப்பாட்டுப்பாடி—அந்தப்
பக்கம் நீயும் போயி! —உன்னைப்
பாக்கக் கூடுவாங்க — பணம்
காசைப் போடுவாங்க! (காலிலே)
கும்பலும் சமுத்திரம்போல்
கூடுது ராமாயி — புதுக்
கும்மிப் பாட்டு ஒண்ணு பாடிஆடு—அந்தப்
பக்கம் நீயும் போயி! — உன்னைப்
பாக்கக் கூடுவாங்க! — பணம்
காசைப் போடுவாங்க! (காலிலே)

பாட்டு-8

வளையல்காரன் பாடியது: S. C. கிருஷ்ணன், ராஜேஸ்வரி

ஆண்: வாங்க அம்மா வாங்க—வளையல்
வாங்கிப் போட்டுப் போங்க!
பூங்கொடிபோல கைகளுக் கேத்த
பொன்னிறக் கண்ணாடி வளையல்
புத்தம் புதுசா ரொம்ப சொகுசா
போடுவேன் மலிஞ்ச வெலேயில் (வாங்க)

பெண்: ஆம்பளை அவரை நம்பாதீங்க
அம்மா இப்படி வாங்க!
வேண்டிய தினுசு ஆயிரம் இருக்கு
பார்த்து வாங்கலாம் நீங்க! (வாங்க)

ஆண்: இது,
மங்காதநிறம் சிங்காரம் தரும்
"மங்கையர் திலகம்" வளையல்

பெண்: இது,
"மக்களைப் பெற்ற மகராசி"-போடும்
செக்கச் செவந்த வளையல்

ஆண்: இது,
சீமையெல்லாம் புகழ்ந்த பழைய
"சிந்தாமணி" வளையல்

பெண்: சேலத்து யாபாரி அனுப்பிவைத்த
"மந்திரி குமாரி" வளையல்!
அமா......அமா...

ஆண்: மதராசு சரக்கு இந்த
"சிங்காரி!' வளையல்

பெண்: "மனமுள்ள மறுதாரம்"-போடும்
மதிப்புள்ள வளையல்!

பாட்டு-9.

உஷா

பாடியது: ஜிக்கி

நெல்லுக்குள்ளே அரிசி இருப்பது
அவசியம் அவசியம்! அவசியம்!
நெஞ்சுக்குள்ளே குறைவில்லாத
நம்பிக்கை இருப்பதும்
அவசியம்! அவசியம்! அவசியம்!
நல்ல மனதை இருளாக்கும்
தொல்லை கொடுக்கும் கருமேகம்!
கள்ளம் கபடம் சந்தேகம் — இதைத்
தள்ளி வைப்பதே முறையாகும்
நம்பிக்கை யொன்றே வாழ்வின் லட்சியம்
வம்பு விளைக்கும் ஆத்திரம் அலட்சியம்!
சிந்தித்து பார்ப்பது ரொம்ப அவசியம்
தெரியும் பிறகு இந்த ரகசியம் (நெல்லுக்)
கண்ணைமட்டும் நம்பாதே!
கருத்தை நீயும் இழக்காதே!
எண்ணிப் பார்க்கும் முன்னாலே
எதையும் முடிவு பண்ணாதே! (நெல்லுக்)

நடிகர்கள்

★

பாலாஜி	...	சேகர்.
தங்கவேலு	...	குபேரம் பிள்ளை.
முத்துகிருஷ்ணன்	...	சந்துரு.
சேதுபதி	...	பொன்னம்பலம் பிள்ளை.
சௌந்தர்	...	இன்ஸ்பெக்டர்.
நாகேஷ்	...	சாஸ்திரியார்.
பாலு	...	மாப்பிள்ளை.
கோவிந்தன்	...	போலீஸ்.

நடிகைகள்

★

சரோஜாதேவி	...	உஷா.
காமினி	...	கோமதி.
முத்துலக்ஷ்மி	...	செந்தாமரை.
குமுதினி	...	சின்னம்மா.
ராஜகாந்தம்	...	உஷா தாயார்.
சுசீலா	...	ஆண்டாள்.
மனோரமா	...	மனோரமா.
கலாவதி	...	சரோஜா.
சாந்தகுமாரி	...	லட்சுமி.

முல்லை அச்சகம், ஆயிரம்விளக்கு, சென்னை—6.